சமூக மீட்பு

# நீங்கள் பேரழிவுக்குத் தயாரா?

குயின்ஸ்லாந்தில் வருடத்தின் எந்த நேரத்திலும் தீவிர வானிலை நிகழ்வுகள் நிகழலாம் அத்துடன் அவை உங்களையும் உங்கள் குடும்பத்தையும் பாதிக்கலாம் மற்றும் சொத்துக்களைச் சேதப்படுத்தலாம். இந்த நிகழ்வுகளில் கடுமையான புயல், வெள்ளம், சூறாவளி, பூகம்பம் அல்லது காட்டுத்தீ ஆகியவை அடங்கும்.

நாம் வானிலையைக் கட்டுப்படுத்த முடியாது, ஆனால் நாம் தயார் செய்யலாம்.

ஒரு பேரிடருக்கு முன், உங்களிடம் உள்ளதைச் சரிபார்க்கவும்:

- உங்கள் செல்லப்பிராணிகளுக்கான திட்டம் உட்பட, உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் பொருத்தமான அவசரத் திட்டம்
- அவசர தொடர்புகளின் பட்டியல்
- தற்போதைக்குரிய காப்பீடு
- நெருக்கடி நிலைக்குத் தேவையான பொருள்கள் அடங்கிய ஒரு பொட்டலம்

பேரழிவுக்கான தயார்நிலை பற்றிய கூடுதல் தகவல் மற்றும் உதவிக்குறிப்புகளுக்கு, **www.getready.qld.gov.au** ஐப் பார்வையிடவும்

## ஒரு பேரழிவுக்குப் பிறகு எங்கே உதவி பெறுவது

**பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்களிடமிருந்து மனிதஉணர்ச்சிகள் தொடர்பான மற்றும் நடைமுறை ஆதரவு கிடைக்கிறது.**

## தனிப்பட்ட ஆதரவு மற்றும் அறிவுரை /ஆலோசனை

ஒரு பேரழிவிற்குப் பிறகு பலவிதமான உணர்ச்சிகளை அனுபவிப்பது பொதுவானது. நீங்கள் துயரம் அனுபவித்தால் அல்லது சமாளிக்கச் சிரமப்பட்டால் தனிப்பட்ட மற்றும் நடைமுறை ஆதரவு கிடைக்கும்.

நீங்களோ, குடும்ப உறுப்பினரோ அல்லது நண்பரோ பின்வருவனவற்றை அனுபவித்தால் உதவியை நாடுங்கள்:

- உணர்ச்சி வயப்பட்ட  அல்லது உளவியல் அழுத்தத்தை அனுபவித்தால்
- சோர்வாக, எரிச்சலாக அல்லது உங்கள் பசியின்மை அல்லது தூக்க முறைகளில் ஏற்படும் மாற்றங்களை உணர்ந்தால்
- மதுபானம் அல்லது பிற போதைப் பொருட்களின் அதிகரித்த பயன்பாடு அல்லது மற்றவர்களிடமிருந்து விலகுதல் போன்ற நடத்தை மாற்றங்களைக் கவனித்தால்
- பேசுவதற்கு ஒருவர் தேவைப்பட்டால்.

### தனிப்பட்ட ஆதரவு மற்றும் ஆலோசனைத் தொடர்புகள்

- லைஃப்லைன் ஆஸ்திரேலியா (கவுன்சிலிங்) – **13 11 14**
- ஆஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கம் – **1800 733 111**
- செயின்ட் வின்சென்ட் டி பால் – **13 18 12**
- குயின்ஸ்லாந்து ஹெல்த் – **13 ஹெல்த் (13 43 25 84)**
- வீட்டு வசதி உதவி – **13 QGOV (13 74 68)**
- மாநில அவசர சேவை (SES) – **13 25 00**
- சமூக மீட்பு நேரடித் தொலைபேசி  – **1800 173 349**

உங்கள் பகுதியில் கிடைக்கும் உள்ளூர் மற்றும் பொது சமூக ஆதரவு சேவைகளுக்கான தொடர்புகளைக் கண்டறிய,**www.qld.gov.au/disasterhelp** ஐப் பார்வையிடவும் மற்றும் ‘பிராந்திய சமூக ஆதரவு’ என்பதைத் தேடவும்.

# நிதி சார்ந்த உதவி

**நீங்கள் பேரழிவால் பாதிக்கப்பட்டிருந்தால், நிதி சார்ந்த உதவி மற்றும் ஆதரவு சேவைகள் கிடைக்கலாம்.**

கூட்டாக நிதியளிக்கப்பட்ட காமன்வெல்த்-மாநில பேரிடர் மீட்பு நிதி ஏற்பாடுகள் (DRFA) மூலம் உதவி வழங்கப்படுகிறது.

## மானியங்கள்*

- **அவசரகால சிரம உதவி -**
  செயல்படுத்தப்பட்ட பேரிடர் பகுதிகளில் உள்ள மக்களுக்கு உணவு, உடை மற்றும் மருந்து போன்ற உடனடி மற்றும் அவசரத் தேவைகளுக்கு உதவுவதற்காக.
- **அத்தியாவசிய வீட்டுப் பொருள்கள் மானியம் -**
  காப்பீடு இல்லாத அல்லது காப்பீட்டைக் கோர முடியாத, செயல்படுத்தப்பட்ட பேரிடர் பகுதிகளில் உள்ள மக்களுக்கு அத்தியாவசிய வீட்டுப் பொருள்களை மாற்றீடாக வழங்க.
- **அத்தியாவசிய சேவைகள் பாதுகாப்பு மற்றும் மறு இணைப்பு மானியம் -**
  மின்சாரம், எரிவாயு, நீர், கழிவுநீர் அல்லது செப்டிக் அமைப்புகள் போன்ற அத்தியாவசிய சேவைகளை மீண்டும் இணைக்க உதவும், செயல்படுத்தப்பட்ட பேரிடர் பகுதிகளில் உள்ள மக்களுக்கு.
- **அத்தியாவசிய சேவைகள் கடின உதவி மானியம் -**
  ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அத்தியாவசிய சேவைகள் ஐந்து நாட்களுக்கு மேல் இழக்கப்படும் போது உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்ய பேரிடரால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களை ஆதரிக்கிறது.
- **கட்டமைப்பு உதவி மானியம் -**
  செயல்படுத்தப்பட்ட பேரிடர் பகுதிகளில் உள்ள மக்கள் தங்கள் வீடுகளைச் சரிசெய்து, அவர்கள் இடர் அச்சமில்லாமலும் பாதுகாப்பாகவும் வாழ உதவுதல்.

*தகுதி அளவுகோல்கள் பொருந்தும்

உங்கள் பகுதியில் எந்தெந்த மானியங்கள் உள்ளன என்பதைக் கண்டறியவும், உங்கள் தகுதியைச் சரிபார்க்கவும், **www.qld.gov.au/disasterhelp** ஐப் பார்வையிடவும்

## மேலும் தகவல்

குயின்ஸ்லாந்து அரசு உங்கள் மொழியில் பேரழிவுகள், மானியங்கள் அல்லது ஆதரவு பற்றிய தகவல்களை வழங்க உரைபெயர்ப்பாளர் சேவையை வழங்குகிறது.

**1800 512 451** என்ற எண்ணை அழைத்து, உங்களுக்கு விருப்பமான மொழியில் உரைபெயர்ப்பாளரைக் கேட்கவும் அல்லது **1800 173 349**என்ற சமூக மீட்பு நேரடித் தொலைபேசியை அழைக்கவும்.

Interpreter

23-070 NOV23

Australian Government

Queensland Government